# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | District: மாவட்டம் | TIRUNELVELI | P.S. காவல் நிலையம் | PANAGUDI | Year ஆண்டு | 2021 | FIR No. 452 மு. த.அ.எண் | Date: நாள் | 09-10-2021 |

2. Act(s) சட்டம் / Sections பிரிவுகள்

| Act(s) சட்டம் | Sections பிரிவுகள் |
|---|---|
| INDIAN PENAL CODE, 1860 | 147 |
| INDIAN PENAL CODE, 1860 | 294(b) |
| INDIAN PENAL CODE, 1860 | 323 |
| INDIAN PENAL CODE, 1860 | 506(2) |

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் FRIDAY Date From: நாள் முதல் 08-10-2021 Date To: நாள் வரை -

Time Period: நேர அளவு On Time From: நேரம் முதல் 23:00 Hrs Time To: நேரம் வரை -

(b) Information received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09-10-2021 Time: நேரம் 21:00 Hrs (c) General Diary Reference: பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Entry No(s)

4. Type of Information: தகவலின் வகை WRITTEN Time : நேரம் -

5. Place of Occurrence: (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் SOUTH & 6.0 Km Beat Number: முறைக் காவல் எண் BEAT2

(b) Address: முகவரி காவல்கிணறு ஜங்ஷனில் உள்ள SAV ஹோட்டல்

(c) In case, outside limit of this Police Station,then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையில், அந்த கா.நி பெயர் - District: மாவட்டம் -

6. Complainant/Informant (a) Name: குற்றமுறையீட்டாளர் / தகவல் தந்தவர் பெயர் BASKAR (c) Date/Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு 1982 (d) Nationality: நாட்டினம் INDIA

(b).Father's/Husband's Name: தந்தை / கணவர் பெயர் THANGADURAI

(e).Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் Date of Issue: வழங்கப்பட்ட நாள் Place of Issue: வழங்கப்பட்ட இடம்

(f). Occupation: தொழில் DRIVER - CAR

(g). Address: முகவரி 3/110 B, SANTHI KOVIL STREET, AVARAIKULAM

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்.

1 GNANATHIRAVIYAM ,MEMBER OF PARLEMENT AVARAIKULAM
2 RAJA (S/O) GNANATHIRAVIYAM ,AVARAIKULAM
3 THINAKARAN (S/O) GNANA THIRAVIYAM ,AVARAIKULAM
4 NAVEEN (S/O) JEBAKUMAR ALIAS APPADURAI

மற்றும் பார்த்தால் அடையாளம் காட்டகூடிய 30 நபர்கள்

8. Reasons for delay in reporting by the complainant/Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம். வாதியால் தாமதம்

9. Particulars of the properties stolen/Involved:

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம்.

10. Total value of properties stolen/Involved:

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report/ Un-natural death Case No. If any:

பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம்

பணிந்து சமர்பிக்கிறேன். இன்று 09.10.2021 ஆம் தேதி பணகுடி காவல் நிலைய முதல் நிலை காவலர் 1248 R.ரமேஷ் ஆகிய நான் நிலைய அலுவலில் இருக்கும் போது ஏற்கெனவே திருநெல்வேலி ஹைகிரவுண்ட் அரசு மருத்துவமனையில் இருந்து தொலைபேசி மூலமாக கிடைக்கப் பெற்ற இண்டிமேஷன் தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் அவர்கள் உத்தரவு படி மேற்படி மருத்துவமனைக்கு 19.00 மணிக்கு சென்று அங்கு தாக்குதலில் காயமடைந்து உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்த திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலூகா, ஆவரைகுளம், சந்தி கோவில் தெருவை சேர்ந்த தங்கதுரை மகன் பாஸ்கர் வயது-39 என்பவரது இண்டிமேஷனை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்த பாஸ்கர் என்பவரிடம் நடந்த சம்பவம் பற்றி விசாரித்து அவர் கைப்பட எழுதி கொடுத்த புகார் மனுவை பெற்று 21.00 மணிக்கு நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 452/2021 U/S 147,294(b),323,506(ii)IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் T.பாஸ்கர் வயது-39 S/O.தங்கதுரை 3/110 B,சந்தி கோவில் தெரு ஆவரைகுளம் இராதாபுரம் தாலூகா திருநெல்வேலி மாவட்டம் பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள்.பணகுடி காவல்நிலையம் திருநெல்வேலி மாவட்டம். அம்மா, நான் ஷ கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். பாஜக உறுப்பினராக உள்ளேன். கடந்த 2019 ம்ஆண்டு ஊரக உள்ளாட்சி தேர்தலில் ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கு பாரதிய ஜனதா கட்சி சார்பாக நான் வேட்பு மனு தாக்கல் செய்து போட்டியிட்டேன். அப்போது தி மு க சார்பாக தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள திரு.ஞானதிரவியம் என்பவர் ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கு போட்டியிட்டார். அந்த தேர்தலானது தமிழக அரசால் ரத்து செய்யபட்டது. மேற்படி தேர்தலில் நான் வாக்கு சேகரிக்க சென்ற போதே என்னை எதிர்த்தா போட்டியிடுகிறாய் என்றும் உன்னை சும்மா விடமாட்டேன் என்று மிரட்டி வந்தார். தற்போது நடைபெற்று வரும் ஊரக உள்ளாட்சி தேர்தலில் எங்களது பாரதிய ஜனதா கட்சி சார்பாக வள்ளியூர் ஒன்றியம் வார்டு எண் 12 ல் திருமதி நிமிதா அவர்கள் போட்டியிடுகிறார்கள். அவருக்கு நான் எங்கள் பகுதியில் உள்ள மக்களிடம் வாக்கு சேகரித்து கொண்டிருந்தேன். இதே 12 வது வார்டில் தி மு க சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஞானதிரவியம் அவர்களின் மைத்துனர் மனைவி திருமதி. மல்லிகா அவர்கள் போட்டியிடுகிறார்கள். கடந்த 10 நாட்களுக்கு முன்பு திரு.ஞானதிரவியம் MP அவர்கள் என்னிடம் வந்து நீ என்னையும் எனது குடும்பத்தையும் எதிர்த்து பிரச்சாரம் செய்கிறாயா ஒழுங்காக இருந்து கொள் இல்லையென்றால் உன்னை அடித்து கொன்று விடுவோம் என்று மிரட்டினார். நான் அதனை பெரிதாக எடுத்து கொள்ளாமல் தொடர்ந்து எங்களது பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் திருமதி நிமிதா அவர்களுக்கு தேர்தல் பணியில் வாக்கு சேகரித்து கொண்டிருந்தேன். இந்நிலையில் நேற்று 08.10.2021 ம் தேதி இரவு சுமார் 11 மணியளவில் நானும் , என்னுடன் சிவக்குமார் பாபு குமரன் சிங்கராஜ் சதாசிவம் ஆகியோர்களுடன் காவல்கிணறு ஜங்சன் அருகில் உள்ள AVM ஹோட்டலில் இரவு உணவு அருந்தி கொண்டிருந்த போது திடீரென்று கடைக்குள் ஷ ஞானதிரவியம் MP மற்றும் அவரது மகன்கள் ராஜா தினகரன் ஜெபக்குமார் (எ) அப்பாத்துரை அவர்களின் மகன் நவீன் மற்றும் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 30 நபர்கள் கடைக்குள் உள்ளே வந்தனர். திடிரென்று திரு.ஞானதிரவியம் MP அவர்கள் என்னை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஹோட்டலில் இருந்த இரும்பு சேரை கொண்டு எனது தலையை நோக்கி ஓங்கிய படி சாவுல தேவடிய மகனே என்று கூறி ஓங்கி அடிக்க முற்பட்டார். நான் விலகவும் அந்த இரும்பு சேர் டேபிளில் பட்டு கீழே விழுந்தது. ஷ ஞானதிரவியம் MP அவர்கள் எனது முகத்தில் கையால் அடித்து சட்டையை பிடித்து கீழே தள்ளினார். நான் நிலைதடுமாறி கீழே விழுந்தேன். கீழே விழுந்த என்னை ஞானதிரவியம் MP மற்றும் அவரது மகன்கள் ராஜா தினகரன் நவீன் ஆகியோர்கள் செருப்பு காலால் எனது நெஞ்சிலும் முதுகிலும் மிதித்து ஞானதிரவியம் அவர்கள் இந்த தேவடியா மகனை அடித்து கொல்லுங்கள் என்று கூறினார். ராஜா தினகரன் ஆகியோர்கள் எங்களது அப்பா திமுக வில் நாடாளுமன்ற உறுப்பினர் எங்களை ஒன்றும் செய்ய முடியாது நடப்பது எங்கள் திமுக ஆட்சி உன்னால் ஒரு மயிறும் புடுங்க முடியாது என்று கூறி கொண்டே என்னை செருப்பு காலால் மிதித்தனர். என்னுடன் சாப்பிட வந்தவர்கள் என்ன செய்வது என்று அறியாமல் திக்கற்ற நிலையில் இருந்தனர்.மேலும் ஷ ஞானதிரவியம் அவர்களுடன் வந்த அடியாட்களை வைத்து கடையில் உள்ள CCTV கேமராவை அடித்து உடைத்து எடுத்து சென்று விட்டனர். மேற்படி நான்கு நபர்கள் தாக்கியதால் எனக்கு தலையின் பின் பக்கத்திலும் பிடதியிலும் முதுகின் தண்டுவடத்திலும் நெஞ்சில் மற்றும் வலது காது வலது கால் மற்றும் எனது உயிர் நிலை ஆணுறுப்பில் அடிபட்டது. அதனால் எனக்கு உடல் அனைத்திலும் மிகுந்த காயங்கள் ஏற்பட்டது. பின்பு ஷ ஞானதிரவியம் என்னை பார்த்து ஒழுங்காக இருந்து கொள் இல்லையென்றால் உன்னை வீடு புகுந்து கொன்று விடுவோம் என்று மிரட்டி அங்கிருந்து சென்று விட்டார்கள். நானும் என்னுடன் வந்த நபர்களும் உயிருக்கு பயந்து ஹோட்டலை விட்டு வெளியில் வராமல் இருந்தோம். என்னுடன் வந்தவர்கள் காவல் நிலையத்தில் தகவல் கொடுத்தவுடன் காவல் அதிகாரிகள் எங்களை உயிருடன் மீட்டு வந்தனர். எதிரிகள் அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் என்பதால் நான் உயிர்க்கு பயந்து உடனடியாக காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. ஷ எதிரிகளின் செயலால் எனக்கு மிகுந்த அடி ஏற்பட்டதாலும் வலி இருந்ததாலும் மூச்சு திணறல் ஏற்பட்டதாலும் இன்று 09.10.2021 காலை சுமார் 10 மணியளவில் எங்களது பாஜக வள்ளியூர் நகர தலைவர் சிவராமகுட்டி உதவியுடன் திருநெல்வேலி அரசு

மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தேன். நடந்த சம்பவத்தை கூறியுள்ளேன். மேற்படி எதிரிகள் சட்ட படியான நடவடிக்கை எடுத்தும் எனது உயிர்க்கும் உடைமைக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். 09.10.2021 தங்கள் உண்மையுள்ள (sd)T.Baskar.8940967980. Sir received the petition at Tirunelveli Medical college Hospital on 09.10.2021 at 19.00 hrs and return back to Panagudi PS and registered a case in Panagudi P.S.Cr.NO:452/2021 U/S 147,294(b),323,506(ii)IPC on 09.10.2021 at 21.00 hrs (sd)R.Ramesh GrI.1248

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் மனு மற்றும் இண்டிமேஷனையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வள்ளியூர் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தபட்ட காவல் உயர்அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆயவாளர் திரு.B.மகேந்திரன் அவர்களுக்கு தகவல் தெரிவித்து நிலையத்தில் அவரது பார்வைக்கு வைத்தேன்.

13. Action Taken: Since the above report reveals Commission of Offence(s) u/s as mentioned in item No.2, registered case and took up the investigation.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2 -ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

FIR read over to the Complainant/Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant/Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant/Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09-10-2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: RAMESH R
பெயர்

Rank: GR I PC
நிலை

No. 1248
எண்

This is an Authentic copy of System Genrated FIR downloaded from TN Police Website (www.eservices.tnpolice.gov.in)

on 11/10/2021 at 12:54:40 pm